**திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக 21 கிராமங்களுக்கு திறக்கப்பட்டுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

திருவாரூர் மாவட்டம் ,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளின் நலன் கருதி நடப்பு குறுவைப் பருவத்தில் கூடுதலாக வலங்கைமான் வட்டம் ஊத்துக்காடு,விளத்தூர்,அவளிநல்லூர்,தெற்குப்பட்டம்,மன்னார்குடி வட்டம் செருமங்கலம், மகாதேவப்பட்டினம்,கருவாக்குறிச்சி,வடகரவயல்,பேரையூர், ஆலங்கோட்டை, கர்ணாவூர், பருத்திக்கோட்டை, நீடாமங்கலம் வட்டம் காளாச்சேரி, பூவனூர், வீரவநல்லூர், கீழப்பட்டு,புள்ளவராயன்குடிகாடு, அய்யம்பேட்டை, திருராமேஸ்வரம், சித்தாம்பூர், கப்பலுடையான் ஆகிய 21 கிராமங்களில் திறக்கப்பட்டுள்ளது.

கிராம விவசாயிகள் தங்கள் குறுவை நெல்லினை கழக விதிகளின்படி விற்பனை செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.நெல்லினை விற்பனை செய்யும்போது சிரமங்கள் ஏதும் இருந்தால் முதுநிலை மண்டல மேலாளர் கைபேசி எண் - 9442255542 ,துணை மேலாளர் (கொள்முதல் ரூஇயக்கம்)திருவாரூர் கைபேசி எண் - 9942381285,துணை மேலாளர் (கொள்முதல் ரூ இயக்கம்)மன்னார்குடி கைபேசி எண் - 9994360407 ஆகிய கைப்பேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளர்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**